செ.வெ.எண்.32 நாள்: 18.04.2020

# அரியலூர் மாவட்டம்
# பொதுமக்கள் அத்தியாவசியத்திற்கு வெளியில் வரும்போது கண்டிப்பாக முக கவசம் அணிய வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று பரவுவதை தடுக்கும் வகையிலும், சமூக இடைவெளியினை கடைபிடிக்கவும் மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனைத்தொடர்ந்து, அரியலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராம பகுதிகளிலுள்ள வீடுகள், தெருக்கள் மற்றம் சாலைகளில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு, சுத்தப்பட்டுத்தப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் சமூக இடைவெளியினை கடைபிடிக்கும் நோக்கில் பொதுமக்கள் வசிக்கும் இடத்திற்கே வாகனங்கள் மூலம் அத்தியாவசிய பொருட்களான காய்கறிகள் மற்றம் மளிகை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், பொதுமக்கள் அத்தியாவசிய பொருட்கள் வாங்க வெளியே வருபவர்கள் கண்டிப்பாக முக கவசம் அணிய வேண்டும் மற்றும் இருசக்கர வாகனங்களில் ஒருவர் மட்டுமே வர அனுமதி. எனவே, பொதுமக்கள் இந்த தொற்று நோயினை தடுக்க அனைவரும் வெளியில் வருவதை தவிர்தது, மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**